OS.No. :34/2019

நாள் : 03.04.2025

வா.சா. : 1

பெயர் : மீராராணி

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

தாவா சொத்துக்களை பொறுத்து என் கணவர் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரி. தற்போது என் கணவர் சிங்கப்பூரில் பணிபுரிந்து வருகிறார் என்றால் சரி. அவர் இந்த வழக்கை நடத்த எனக்கு பவர் எழுதி கொடுத்திருக்கிறார் என்றால் சரி. அனடிப்படையில் இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரி. 2ம் பிரதிவாதி என் கணவரின் சகோதரர் என்றால் சரி. அவரும் சிங்கப்பூர் நாட்டில் பணிபுரிந்து வருகிறார் என்றால் சரி. என் மாமனார் பெயர் திருவேங்கடம். அவருக்கு என் மாமியார் முதல் மனைவி இரண்டாவது மனைவி 1ம் பிரதிவாதி செல்வி. என்ன பரிகாரம் கோரி என் கணவர் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் என் கணவர் சம்பாதித்த சொத்தை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாத்தா வழி சொத்தில் பாகம் கேட்டிருக்கிறோம். தாவா சொத்துக்கள் முழுமையும் சீர்காழி தாலுக்கா, ஆலங்காடு கிராமத்தில் உள்ளது என்றால் சரி. தாவா சொத்துக்களில் எவ்வளவு நஞ்சை எவ்வளவு புஞ்சை நிலங்கள் என்று தெரியாது என்றால் சரி. அதுபோல் என் கணவர் தாக்கல் செய்த வழக்கில் A, B பட்டியல் சொத்துக்களில் எவ்வளவு சொத்துக்கள் நஞ்சை மற்றும் புஞ்சை என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரி. என் கணவர் சிங்கப்பூரில் இருந்து சம்பாதித்த பணத்தில் தான் தாவா B பட்டியல் சொத்துக்கள் வாங்கப்பட்டது என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. எனக்கு போட்ட நகை மற்றும் என் கணவர் எடுத்து வந்த நகை மொத்தம் 42 சவரன் நகையை விற்று அந்த சொத்தை வாங்கினோம். 42 சவரன் நகையை விற்றதற்கும் எந்த

G.மீராராணி

ஆவணமும் போடவில்லை என்றால் சரி. என் கணவர் 1987 முதல் சிங்கப்பூரில் வேலை செய்தார் என்று காட்டுவதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. தாக்கல் செய்வோம்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக 15.04.2025 அன்று ஒத்தி வைக்கப்படுகிறது) எ. வீரராணி

என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அவை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு எனது ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

3/4/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

03/4/25